# PDM COURT, SANKARANKOVIL

**தேதி: 07-06-2019**

**அசல் வழக்கு எண்: 20/2016**

**வா.சா.1 மீண்டும் ஆஜர் சத்தியப்பிரமாணத்தின் பேரில் முதல் விசாரணை தொடர்ச்சி :**

நான் வழக்கின் வாதி. 15.09.2009 தேதியில் கணேசன் பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.6. (இந்த கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்த கருப்பாயி அம்மாளுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று கூறிய பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 03.06.2013 தேதியில் கணேசன் என் பெயருக்கு எழுதிக்கொடுத்த கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.7. (இந்த கிரைய ஆவணத்தை எழுதிக்கொடுத்த கணேசனுக்கு எவ்வித உரிமையும் இல்லை என்று கூறிய பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் ஆட்சேபணையுடன் குறியீடு செய்யப்படுகிறது). 12.11.2013 தேதியில் பிரதிவாதி பெயரில் ஏற்பட்ட கிரைய ஆவணத்தின் சார்பதிவக நகல் தாக்கல் செய்கிறேன். அது வா.சா.ஆ.8. நான் தாக்கல் செய்துள்ள மேற்படி ஆவணங்களை ஏற்றுக்கொண்டு அசல் வழக்கில் நான் கோரும் பரிகாரம் வழங்கியும், பிரதிவாதியின் எதிர் கோரிக்கையையும் தள்ளுபடி செய்து தீர்ப்பாக பிரார்த்திக்கிறேன்.

**குறுக்கு விசாரணை பிரதிவாதி தரப்பு வழக்கறிஞரின் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திவைக்கப்படுகிறது.**